செ.வெ.எண்: 212 நாள்: 27.03.2018

# திருநெல்வேலியில் மண்டல அளவிலான வருவாய்த்துறை அலுவலர்களுக்கு பேரிடர் மேலாண்மை பயிற்சி கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

-----

திருநெல்வேலியில் தனியார் ஒட்டல் கூட்ட அரங்கில் மண்டல அளவிலான வருவாய்த்துறை அலுவலர்களுக்கு பேரிடர் மேலாண்மை பயிற்சி கூட்டம் இன்று (27.03.2018) நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 5 மாவட்டங்களை சேர்ந்த சார் ஆட்சியர்கள், வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள் என 170 அலுவலர்கள் பங்கேற்றனர். இக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பேரிடர் மேலாண்மை பயிற்சி கூட்டத்தை தொடங்கி வைத்து பேசியதாவது:-

தமிழக அரசு வருவாய்த்துறை அலுவலர்களுக்கு மண்ட அளவில் பேரிடர் மேலாண்மை பயிற்சி வழங்கிட உத்தரவிட்டுள்ளதன் அடிப்படையில் இன்று திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதாபுரம், விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி உள்ளடக்கிய 5 மாவட்ட வருவாய்த்துறை அலுவலர்களுக்கான பேரிடர் மேலாண்மை பயிற்சி வழங்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டம் கடற்கரை கொண்ட மாவட்டம் மேலும் அதிகமான அணைகளை கொண்டதும், நீண்ட ஆற்று பகுதியை கொண்ட மாவட்டமாகும். இயற்கை பேரிடர் வாய்ப்புகள் உள்ள மாவட்டமாகும். பேரிடர் காலங்களில் பல்வேறு துறைகளை எவ்வாறு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இப்பயிற்சியின் மூலம் மேலும் சிறப்பாக செயல்பட முடியும். பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்கு தகவல் தெரிவிக்கும் வகையில் NAMMA NELLAI மொபைல் அப்பில் தகவல் அனுப்பும் வகையில் வசதி செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கு மட்டும் தகவல் அனுப்பும் வசதியும், வெள்ளம் தொடர்பான தகவல் ஒலியுடன் கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. பேரிடர் காலங்களில் சிறப்பாக செயல்பட்டு பொதுமக்களுக்கு எவ்வித சேதாரமின்றி காத்திட இது போன்ற பயிற்சிகள் பேருதவியாக அமையும் எனவே இப்பயிற்சியில் செல்லப்படும் கருத்துகளை நன்கு அறிந்து கொண்டு மற்ற அலுவலர்களுக்கும் எடுத்துக்கூறிட வேண்டும். என பேசினார்.

தொடர்ந்து அண்ணா பல்கலை கழகத்தின் மூலம் வெள்ள பாதிப்பு பேரிடர் மீட்பு தொடர்பாகவும், தீயணைப்புத்துறையின் மூலம் தீ விபத்து பேரிடர் மீட்பு பணிகள் தொடர்பாகவும், ஸ்ரீ சத்திய சாய் சேவா அமைப்பின் மூலம் பேரிடர் மேலாண்மை தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், சார் ஆட்சியர்கள் (சேரன்மகாதேவி) திரு.ஆகாஷ் இ.ஆ.ப, (பரமக்குடி)திரு.விஷ்னு சந்திரன் இ.ஆ.ப, (பத்பநாதபுரம்)திரு.ராஜகோபால் சுங்கரா இ.ஆ.ப, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத் இ.ஆ.ப., அண்ணா பல்கலைகழக முதல்வர் திரு.சத்திநாதன், திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, தென்காசி கோட்டாட்சியர் திரு.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.கணேஷ்குமார், திருநெல்வேலி பேரிடர் மேலாண்மை வட்டாட்சியர் திரு.திருப்பதி, ஸ்ரீ சத்திய சாய் சேவா டிரஸ்ட் ஒருங்கிணைப்பாளர் திரு.ரமேஷ் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.